சமூக நல ஊழியர்கள் கிராம அபிவிருத்தித் திட்டங்களிலே பணியாற்றுகிறார்கள் என்பது இந்த அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவரவர்களே, கிராமத்திலேயுள்ள பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கும் தனித்தனியாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, எல்லாத் துறைகளுக்கும், வேளாண்மைத்துறைக்கு என்று ஒரு அதிகாரி, கல்வித்துறைக்கு என்று ஒரு அதிகாரி, சுகாதாரத் துறைக்கு என்று ஒரு அதிகாரி, கூட்டுறவுத் துறைக்கு ஒரு அதிகாரி என்று தனி அதிகாரிகள் இருக்கிறார்கள். இவர்கள் அத்தனை பேர்களுமே சமூக நலக் காரியம்தான் செய்கிறார்கள் என்பது பொருள் எங்களுக்குக் கிடைத்துள்ள தகவலின்படி, தேசீய பரம்பரையில், விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் என்பதால்தான் இப்படிப்பட்ட பதவிகளில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அரசாங்கக் குறிப்பிலும் இருக்கிறது. சமூக நல ஊழியர்கள் வாராவாரம் கொடியேற்றுகின்ற பணியினைத்தான் செய்து வருகிறார்கள் என்ற புகார்கள் இருக்கின்றன.

திரு. க. கோமதி சங்கரதீட்சிதர் : தலைவரவர்களே, கனம் மந்திரியவர்கள் கூறியபடி இந்தச் சமூக நல ஊழியர்கள் ஏற்கெனவே மக்களிடத்திலே ஊழியம் செய்திருக்கிற அனுபவம் பெற்றிருப்பதால் இப்பொழுது இருக்கக்கூடிய சமுதாய முன்னேற்றத்திற்காக நல்ல முறையிலே பணி செய்வதற்காக அவர்கள் கூறியபடி வாய்ப்புக் கொடுத்து, அவர்களுடைய ஊழியத்தை இன்னும் சிறந்த முறையில், மக்களுக்கு ஊழியம் செய்யக்கூடிய வகையில் இந்த அரசாங்கம் ஏற்படுத்த முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவரவர்களே, அவர்களுக்கு வேலைகள் அதிகமாக இல்லை என்ற குறை தமிழ்நாட்டிலே பரவலாக இருக்கிறது. குறிப்பிட்ட இயக்கத்தில், விடுதலைப்போராட்டம், மற்ற இயக்கங்களில் ஈடுபட்டவர்கள் அவர்கள் என்பதைக் கருதிக் கொண்டிருப்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். இந்த அரசாங்கம் அவர்களைத் திடீரென்று எடுக்காமல் தொடர்ந்து வைத்திருக்கிறது. அப்படி இருப்பவர்களைப் பற்றிப் பல்வேறு கேள்விகளைக் கேட்டு அவர்களை ஒரு பிரச்சினைக்கு உரிய பொருளாக ஆக்க வேண்டாமென்று உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். அவர்களுக்கு நல்ல வேலைகள் கொடுப்பது பற்றி அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டுதான் இருக்கிறது.

நூற்பாலைகளில் தொழிலாளர் அரசாங்கக் காப்புறுதித் திட்டம்

* 129 திரு. என். எஸ். வி. சித்தன்
திரு. க. கோமதி சங்கரதீட்சிதர் } மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் உள்ள நூற்பு ஆலைகளில் எத்தனை ஆலைகளில் இன்னும் தொழிலாளர் இன்ஷூரன்ஸ் (E. S. I.) திட்டம் செயல்படுத்தப்படவில்லை?

(இ) அவைகளுள், மதுரை மாவட்டத்தில் உள்ள ஆலைகள் எவை, எவை?

(உ) அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ), (இ) & (உ) பேரவைமுன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு க. கோமதிசங்கரதீட்சிதர்.—சபாநாயகரவர்களே, இங்கு அளிக்கப்பட்ட அறிக்கையைப் பார்த்தேன். படிப்படியாக இன்னும் இந்த இன்ஷூரன்ஸ் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறி அதை விரைவில் நடத்த ஆவன செய்ய அரசாங்கம் முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

---

* 55–56-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1969 மார்ச் 1]

திரு கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, இந்த இ. எஸ். ஐ. திட்டத்தினுடைய நோக்கம் தொழிலாளர்களுக்கு வைத்திய வசதி செய்து கொடுப்பது பற்றியது. ஆனால் 250 தொழிலாளர்கள் இருக்கும் இடங்களில் அவர்கள் 500 பேராக ஆகும் வரையில் இ. எஸ். ஐ. திட்டத்தை அமல் நடத்துவது இல்லை என்று சொல்லப்படுகிறது. அவர்கள் எப்பொழுது 500 பேர்களாவது, எப்பொழுது இந்தத் திட்டத்தின் பயனைப் பெறுவது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்.—இப்பொழுது 750-இலிருந்து இருக்கக்கூடிய தொழிலாளர் பகுதிகளிலே நிறைவேற்ற அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது. விரைவில் அது 600-ஆக ஏற்றுக்கொள்ளப் படும். இப்படி படிப்படியாக அமலுக்கு வரும் என்பதைத் தெரிவித் துக்கொள்ளுகின்றேன்.

திரு. நா. காசிராமன் : தலைவரவர்களே, மொத்தம் 82 நூற்பு ஆலைகளில் உள்ள தொழிலாளர்கள் இந்தக் காப்பு நிதித் திட்டத்தினால் பயன் அடையவில்லை என்று தெரிகிறது. மொத்தம் எவ்வளவு பேர் இம்மாதிரி இன்னும் பயன் பெறாமல் இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எவ்வளவு பேர் பலன் பெற வில்லை என்ற விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார் இந்த அறிக்கையிலே உள்ளபடி 82 நூற்பு ஆலைகளில் வேலை செய்யக்கூடிய தொழிலா ளர்களுக்கு இந்த காப்புநிதித் திட்டம் நீடிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. அதற்குக் காரணம் சட்டப்படி அந்த ஆலைகளிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் எண்ணிக்கை இல்லை என்ற அடிப்படையிலா அல்லது பொருளாதார மந்தத்தின் நெருக்கடி என்கிற அடிப்படையிலா என்பதைச் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எண்ணிக்கை அடிப்படையிலே.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, இ. எஸ். ஐ. திட்டம் அமல்படுத்தப்படுகின்ற மில்களிலே அவர்கள் அதற்கான பணத்தைக் கட்டுவது இல்லை என்ற விவரம் அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படிக் கட்டாத முதலாளிகளின் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிக்கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு பி. வேலுசாமி : சார், இ. எஸ். ஐ. திட்டத்தை அமைப்பதற் யான காண்ட்ரிபியூஷனையும், மேனேஜ்மெண்ட் காண்ட்ரிபியூஷனையும் மில்காரர்கள் கட்டாமல் இருப்பதால் பல தொழிலாளர்கள் அந்தச் சலுகையைப் பெறாமல் இருக்கிறார்கள், அவர்களுக்குத் தண்டனை வழங்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : குறிப்பிட்ட மில்லைப்பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக் கலாம்.

கடலலையிலிருந்து மின் சக்தி உற்பத்தி

* 130 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கடல் அலை மூலமாக மின்சாரம் எடுப்பதற்கு சர்க்கார் முயற்சி எடுப்பது உண்மையா ?

(இ) ஆம் என்றால், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : கடல் அலையிலிருந்து மின்சக்தி உற்பத்தி செய்வது குறித்து 1964-ல் அரசாங்கம் பரிசீலனை செய்தது.